தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, அமைச்சர் எ.வ.வேலு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில், ரிஷிவந்தியம் ஒன்றியம், பழைய சிறுவங்கூர் ஊராட்சியை சேர்ந்த, அதிமுக அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கே.எல். ரவிச்சந்திரன்,லா.கூடலூர் மு.ஊ.மன்ற தலைவர், அதிமுக அம்மா பேரவை ஒன்றிய பொருளாளர் வழக்கறிஞர் எம்.கொளஞ்சியப்பன், பள்ளிப்பட்டு மு.ஊ.மன்ற தலைவர் அதிமுக மு.மேலவை பிரதிநிதி, கே.பரசுராமன், கீழ்ப்பாடி ஊராட்சி தேமுதிக கிளைக் கழக செயலாளர் என்.விஸ்வநாதன், அதிமுக மு.இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை ஐம்படை கே.ரங்கநாதன், அதிமுக ஒன்றிய இணைச் செயலாளர் ஐம்படை கே. கிருஷ்ணமூர்த்தி, ஐம்படை இளைஞர் பாசறை இ.மணிகண்டன் மற்றும் அ.சின்னராஜ் ஆகியோர் அ.தி.மு.க. மற்றும் தே.மு.தி.க.வில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார், புதிதாக கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியினருக்கு அமைச்சர் எ.வ.வேலு கழக வேட்டி அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம்

குன்னம் தொகுதி - செந்துறையில் புதிய குளிர்சாதன பேருந்து!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர் அக் 20

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் செந்துறை மாதவரம் செல்லும் புதிய குளிர்சாதன பேருந்தை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ் நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சி ஒன்றியம், செந்துறையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்(விழு)லிட், கடலூர் மண்டலம் புதிய குளிர்சாதனப் பேருந்து சேவையினை விருத்தாசலத்தி லிருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு ஆண்டிமடம் ஜெயங்கொண்டம் வழியாக செந்துறை சென்றடையும் வகையிலும், செந்துறையிலிருந்து காலை 7.10 மணிக்கு புறப்பட்டு ஆர். எஸ்.மாத்தூர், பெண்ணாடம், திட்டக்குடி, தொழுதூர், உளுந்தூர் பேட்டை, விழுப்புரம் வழியாக சென்னைமாதவரம் சென்றடையும் வகையிலும், சென்னை மாதவரத்தில் மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு திண்டிவனம், விழுப்புரம் வழியாக விருத்தச்சாலம் வந்தடையும் வகையிலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

புதிய குளிர்சாதனப் பேருந்து சேவையை துவக்கி வைத்த பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தீபாவளி திருநாளை முன்னிட்டு பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு பேருந்து வசதிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும் என அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் சிறப்பு கூட்டம் நடைபெற்று அதில் திட்டமிட்டபடி வியாழக்கிழமை முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. சென்னையிலிருந்து வழக்கமாக 2092 பேருந்துகள் தமிழ்நாட்டில் பிற பகுதிகளுக்கு செல்லும். அது மட்டுமல்லாது முதல் நாள் வியாழக்கிழமை சென்னையிலிருந்து 760 பேருந்துகளும், நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை 2185 பேருந்துகள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டது. முதல் நாள் 1,28,000 நபர்கள் சென்னையில் இருந்து பிற பகுதிகளுக்கு பயணம் செய்துள்ளனர். நேற்றைய தினம் 2,38,000 நபர்கள் சென்னையில் இருந்து பிற பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு உள்ளனர். மொத்தமாக இரண்டு நாட்களில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் பயணம் மேற்கொண்டுள்ளனர். இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுகிழமைகளில் ஏற்கனவே இயக்கபடும் 2092 பேருந்துகளுடன் கூடுதல் பேருந்துகளும் இயக்கப்படவுள்ளது. இன்றையதினம் 1875 பேருந்துகளும் நாளை 750 பேருந்துகளும் இயக்கப்பட இருக்கிறது. வழக்கமான பேருந்துகளை விட கூடுதலாக பேருந்துகளை திட்டமிட்டு இயக்கியதன் காரணமாக நேற்று திட்டமிடப்பட்டதை விட 175 பேருந்துகள் குறைவாகத்தான் இயக்கப்பட்டது. ஆனாலும் விடியற்காலை 2 மணியளவில் மொத்தமாக வந்திருந்த அனைத்து பயணிகளும் சொந்த ஊர் செல்வதற்கு அனுப்பி வைக்கபட்டுள்ளனர். பொதுமக்கள் எவ்வித பாதிப்பும் இல்லாமல் பயணம் செய்வதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க கூடுதல் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆம்னி பேருந்துகள் கட்டண உயர்வு என்பது கடந்த வாரம் ஒரு செய்தியாக இருந்தது. ஆனால் நான்கு நாட்களுக்கு முன்பாக போக்குவரத்து ஆணையர், அவர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டத்தினை நடத்தி அறிவுரைகள் வழங்கிய பிறகு அந்த பிரச்சனையும் எழவில்லை. ஆம்னி பேருந்துகள் இயக்கப்படுகின்ற பகுதிக்கு நானே நேரில் சென்றேன். எந்த புகாரும் இல்லை. மேலும், அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு சுமார் 1,68,000 நபர்கள் முன்பதிவு செய்து பயணம் செய்திருந்தனர். ஆனால் தற்போது நேற்றைய நிலவரப்படி சுமார் 2,80,000 நபர்கள் முன்பதிவு பயணம் மேற்கொண்டுள்ளனர். போக்குவரத்து துறையில் எப்போதும் இல்லாத அளவிற்கு நேற்றையதினம் மட்டும் சுமார் 83,000 நபர்கள் முன்பதிவு செய்து பயணித்துள்ளனர். அதில் சென்னையிலிருந்து மட்டும் 53,000 நபர்கள் முன்பதிவு செய்து தங்களது பயணத்தை மேற்கொண்டுள்ளனர். தனியார் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணித்தவர்கள் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் முன்பதிவு செய்து பயணிக்கின்றனர் என்பதையே இது உணர்த்து கிறது.

கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு இரு சக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இப்போது அந்த எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக தோன்றுகிறது. நேற்று இரவு கிளாம்பாக்கம் ஆய்வு முடிந்த பிறகு அரியலூர் வருகின்ற வழியில் இருசக்கர வாகனத்தில் பயணிப்போர் எண்ணிக்கை குறைவாக இருந்ததை காண முடிந்தது. அவர்களும் முன்பதிவு செய்து பயணிக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. பொதுமக்கள் அரசு போக்குவரத்து கழகத்தை அதிக அளவில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மிகுந்த கவனத்தோடு ஒவ்வொரு பண்டிகை நாட்களிலும் முறையாக திட்டமிட்டு எவ்வளவு பேருந்துகள் இயக்கப்படுகிறது என்பதை அறிவித்து, பேருந்துகள் இயக்கப்படுவதால் பொதுமக்கள் எவ்வித பாதிப்பும் இல்லாமல் பயணிக்கின்றனர். நேற்றையதினம் கிளாம்பாக்கத்தில் ஆய்வு செய்கின்ற போது முன்பு பதிவு செய்திருந்தவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே வருகைதந்து காத்திருந்து அவர்களுக்கான பேருந்துகளில் பயணிப்பதை பார்க்க முடிந்தது. அதே போன்று முன்பு பதிவு செய்யாத பயணிகளும் வருகை தருவதற்கு ஏற்றவாறு பேருந்துகள் திட்டமிட்டு இயக்குப்படுவதால் அவர்களும் எவ்வித சிரமமும் இன்றி பயணம் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் தனியார் ஒப்பந்த பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. சிறப்பு பேருந்துகளை இயக்குவதற்கு அதிக பயணிகள் செறிவு இல்லாத வழித்தடங்களில் இயங்குகின்ற பேருந்துகள் வழக்கமாக சிறப்பு பேருந்துகளாக இயக்கப்படும். ஆனால் இப்பொழுது அந்த பேருந்துகள் எடுக்கப்படாமல், அந்த பேருந்துகள் அங்கேயே செயல்படுகின்ற சூழலில் இந்த ஒப்பந்த பேருந்துகளை எடுத்து செயல்படுத்துகிறோம். வழக்கமான வழித்தடத்தில் இயங்குகின்ற பேருந்துகளை எடுக்கும்போது அதனை இயக்குகின்ற ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு கூடுதல் பணிச்சுமை இருக்கும். இப்போது அவர்களுக்கும் அந்த கூடுதல் பணிச்சுமை குறைந்துள்ளது. எனவே இது வெற்றிகரமான நடைமுறையாக இருக்கிறது.

கட்டணம் என்பது அரசு போக்குவரத்துக் கழகங்களில் என்ன கட்டணமோ அதே கட்டணம்தான். பேருந்துகள் புறப்படும் பொழுது பயணச்சீட்டு கொடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. அது மட்டுமன்றி அப்பேருந்துகளின் முன்பக்கம் இது ஒப்பந்த அடிப்படையில் அரசு இயக்குகின்ற வாகனம் அரசு நிர்ணயித்துள்ள கட்டணம் ஆகிய விவரங்கள் ஒட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டினை காட்டிலும் தற்போது கூடுதலான நபர்களே பயணம் மேற்கொண்டுள்ளனர். கடந்த ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் அதிகமான நபர்கள் பயணம் செய்திருந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் மீது நம்பிக்கை கொண்டு அரசு பேருந்துகளில் பொதுமக்கள் பயணம் மேற்கொள்கின்றனர் என்பதையே இதுகாட்டுகிறது. காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் ஏற்படும் காலங்களில் அனைத்து பகுதிகளிலும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கு அனைத்து மின்துறை பணியாளர்களுக்கு தயாராக இருப்பதற்கு அறிவுறுத்தபட்டிருக்கிறது. காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் வருகின்ற போது காற்று பலமாக வீசி மின்கம்பங்கள் சாய்ந்தால் மின்கம்பிகள் மாற்றி சரிசெய்ய ஏதுவாக போதிய மின்கம்பங்களை இருப்பில் வைத்து கொள்ளவும், பணியாளர்கள் எந்த நேரத்திலும் தொடர்ந்து கவனத்துடன் இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கு பிரச்சனை ஏற்பட்டாலும் அதனை சமாளிப்பதற்கு மின்துறையினர் அனைவரும் தயார் நிலையில் உள்ளனர் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்,கும்பகோணம் நிர்வாக இயக்குநர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலம், பொது மேலாளர் எஸ். பாண்டியன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி.சதீஸ் குமார், ராம்குமார், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, விருத்தாச்சலம் பணிமனை கிளை மேலாளர் ரவி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதி ரவன், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், மாவட்ட, ஒன்றிய கழக தோழர்கள், மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர்

க.தேவராஜ் எம்.எல்.ஏ.வின் சகோதரர் க.சண்முகம் மறைவு!

கழக முன்னணியினர் அஞ்சலி!

திருப்பத்தூர், அக். 20 -

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. வினர் மூத்த சகோதரர் கொத்த கோட்டை ஊராட்சி, செக்குமேடு கிராமம் முன்னாள் கிளை கழக செயலாளர் க.சண்முகம் அவர்கள் நேற்று (19.10.2025) காலை 10.00 மணியளவில்

இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக முன்னணியினர் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த க.சண்முகம் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20.10.2025) காலை 11 மணியளவில் புறப்பட்டு) செக்குமேடு கிராமத்தில் உள்ள அவர்களது நிலத்தில் நல்லடகம் செய்யப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,பூசனூர் ஊராட்சி, வடமலைசமுத்திரம் கிராமத்தில் அங்கன்வாடி மைய கட்டிடம், கட்டுவதற்கும்,பூசனூர் ஊராட்சியில் பேவர் பிளாக் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணியையும் ரூ.94.76லட்சம் மதிப்பீட்டில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.உடன் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், அன்புராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உளுந்து மற்றும் பச்சை பயறுக்கான காப்பீட்டு தொகையை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் அவர்கள், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோருக்கு மயிலாடுதுறை மாவட்ட காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் சார்பில் நன்றியினை தெரிவித்தனர்.

கிணத்துக்கடவு தொகுதியில்

ரூ.8.70 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள்!

மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் – கே.ஈஸ்வரசாமி எம்.பி, துவங்கி வைத்தனர்!

கோவை, அக்.20–

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி, கிணத்துக்கடவு மேற்கு, மத்திய மற்றும் வடக்கு ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 8 கோடியே 70 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் துவங்கி வைத்தனர்.

கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட வடபுதூர் கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, சிக்கலாம்பாளையம் ஊராட்சியில் ரூபாய் 39 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி, பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி, கிணத்துக்கடவு மத்திய ஒன்றியத்துக்குட்பட்ட கோதவாடி ஊராட்சியில் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி, கொண்டம்பட்டி கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, செங்குட்டுபாளையம் கிராமத்தில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி, வடசித்தூர் ஊராட்சி குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 16.50 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி, குரும்பபாளையம் கிரா மத்தில் ரூபாய் 18.45 லட்சம் மதிப்பீட்டில் அரசம்பாளையம் ரோடு முதல் வடசித்தூர் ரோடு வரை தார்சாலை அமைக்கும் பணி, காரச்சேரி வடசித்தூர் ரோடு முதல் குரும்பபாளையம் சம்பு வரை ரூபாய் 6.84 இலட்சம் மதிப்பீட்டில் பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 11.94 லட்சம் மதிப்பீட்டில் சைட் எண் 7 முதல் 92 வரை இ.ச.எண்467/2 வடிகால் உடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு முதல் வீதி சைட் எண் 26 முதல் 20 வரை க.ச.எண் 467/2 வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு இரண்டாவது வீதி சைட் எண் 48 க.ச.எண் 467/2 வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 3.46 இலட்சம் மதிப்பீட்டில் கிழக்கு மூன்றாவது வீதி சைட் எண் 74 முதல் 68 வரை க.ச.எண் வடிகளுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு முதல் வீதி சைட் எண் 19 முதல் 14 வரை க.ச எண் 467/2 வடிகாலுடன் கூடிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்ப பாளையம் கிராமத்தில் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு இரண்டாவது வீதி சைட் எண் 43 முதல் 38 வரை க.ச எண் 467/2 வடிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்ப பாளையம் கிராமத்தில் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு மூன்றாவது வீதி சைட் எண் 67 முதல் 62 வரை க.ச எண் 467/2 வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான் கிரீட் சாலை அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 4.65 இலட்சம் மதிப்பீட்டில் சைட் எண் 86 மற்றும் 96ல் கிடைமட்ட உறிஞ்சுகுழி அமைக்கும் பணி, குரும்பபாளையம் கிராமத்தில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் மின்விளக்குகள் பொருத்தும் பணி, கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட அரசம்பாளையம் ஊராட்சியில் ரூபாய் 269.22 இலட்சம் மதிப்பீட்டில் காரச்சேரி அங்கன்வாடி முதல் துரை கவுண்டர் தோட்டம் வரை தார் சாலை அமைக்கும் பணி, அரசம்பாளையம் கிராமத்தில் ரூபாய் 91.54 இலட்சம் மதிப்பீட்டில் காரச்சேரி சாலையினை மேம்பாடு செய்யும் பணி, மெட்டுவாவி ஊராட்சியில் ரூபாய் 36.70 இலட்சம் மதிப்பீட்டில் பில்லுமடை முதல் கிழக்குத் தோட்டம் வரை தார் சாலை அமைக்கும் பணி, பெரிய களந்தை கிராமத்தில் ரூபாய் 12.55 இலட்சம் மதிப்பீட்டில் மஞ்சம் பாளையம் நடராஜ் வீடு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, மாறால் மற்றும் லோகநாதன் வீடு அருகில் சிறு பாலம் அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் கருப்புராயன் கோவில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் சக்திவேல் வீடு அருகில் சிறு பாலத்துடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, நாராயண நாயக்கன் புதூர் கிராமத்தில் மெயின் ரோடு முதல் மேல்நிலைத் தொட்டி வரை பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி என மொத்தம் ரூபாய் 8 கோடியே 70 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தனர்.

இதில் கிணத்துக்கடவு மேற்கு ஒன்றிய செயலாளர் செந்தில்குமார், கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட ஊராட்சி முன்னாள் உறுப்பினர் ராஜன் உள்பட ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நைனார் கோவில் ஒன்றியத்தில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார் குடும்ப நல்வாழ்வுத்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவானந்த வள்ளி, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் பொற்செல்வன், நைனார் கோவில் வட்டார மருத்துவ அலுவலர் திருமதி நிவேதிதா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் சக்தி மற்றும் அண்ணாமலை முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மணிமண்ணன்,மாவட்ட பிரதிநிதி அரசு மணி,ஒன்றிய துணைச் செயலாளர் வாசு , ஊராட்சி மன்ற தலைவர் நாகராஜ்,கிளை கழகச் செயலாளர்கள் கோபால் மற்றும் காந்தி மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.வி. மலையன்

அக்டோபர் 21 (2024)

கழகம் துவக்கப்பட்டபோதே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

சென்னை மாவட்டத்தில் சூளைமேடு வட்டச் செயலாளராகவும் – நீண்டகாலம் தென்சென்னை மாவட்ட அவைத்தலைவராகவும் – தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகத் தலைவர் சென்னை மாநகர மேயராக பொறுப்பு வகித்தபோது சென்னை மாநகராட்சி மன்ற ஆளுங்கட்சித் தலைவராகவும், 2001–2006ல் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.